# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 157/12 — 1975 අප්‍රේල් 02 වැනි බදාදා — 1975.04.02

157/12 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 02 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.அ.எண் : என். 136/75

இலங்கைக் குடியரசின் சனாதிபதியும் முதற்பெரும் படைத்தலைவருமான விலியம் கொபல்லவ அவர்களால்

(முத்திரை)

வி. கொபல்லவ.

திரு. வின்சென்ற் விமலதர்ம குலரத்தின அவர்களுக்கு

வாழ்த்துக்கள் :

இதனகத்துப் பின்னர் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்தல் அவசியமானதென எனக்குத் தோன்றுவதாதவால் :

இப்பொழுது, சனாதிபதி விலியம் கொபல்லவ ஆகிய நான், உங்கள் விவேகம், திறமை, நேர்மை என்பனபற்றி மிக்க நம்பிக்கையும் உறுதியும் கொண்டு, (393ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, சொல்லப்பட்ட வின்சென்ற் விமலதர்ம குலரத்தின ஆகிய உங்களை, பின்வரும் கருமங்கள் தொடர்பில், அவையாவன—

(1) 1975, பெப்புருவரி மாதம் 3 ஆந் தேதியன்று அல்லது அத்தேதியளவில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வித்தியாலங்கார வளாகத்தில் ஏற்பட்ட ஒழுக்காறு சிதைதற்கான காரணம் அல்லது காரணங்களும் அதனையேற்படுத்திய சம்பவம் அல்லது சம்பவங்களும், சொல்லப்பட்ட வளாகத்தில் 1975, பெப்ருவரி மாதம் 3 ஆந் தேதியன்று நடைபெற்ற புதுமுறைக் கணிதத்திலான திப்புளோமாக் கற்கைநெறிக்கு வந்திருந்த ஆசிரியர்களைத் தொந்தரை படுத்துவதனை இயலச்செய்த சூழநிலைகளும் ;

(2) இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாள் அல்லது ஆட்கள், அவரது அல்லது அவர்களது கடமைகளைப் புரியாது அசட்டைசெய்ததனால் சொல்லப்பட்ட ஆசிரியர்களைத் தொந்தரைப்படுத்துவதனை இயலச் செய்தனரோவெனவும், எவரேனுமாள் அல்லது ஆட்கள், சொல்லப்பட்ட தொந்தரை படுத்துதலைத் தடுப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு அவசியமானதும் சமயோசிதமானதுமான நடவடிக்கை எடுக்கத் தவறினரோவெனவும் ;

(3) எவரேனுமாள், நேரடியாகவோ மறைமுகமாகவோ, சொல்லப்பட்ட திப்புளோமாக் கற்கைநெறிக்கு வந்திருந்த சொல்லப்பட்ட ஆசிரியர்களை அல்லது வேறு ஆளைத் தொந்தரைப்படுத்துவதில் ஈடுபட்டாரோவெனவும் ;

(4) சொல்லப்பட்ட தொந்தரைப்படுத்துதலுடன் சம்பந்தப்பட்டுள்ள ஏதேனும் ஒழுக்காறின்மைச் செயல் புரியப்படுவதனை இயலச் செய்வதற்கு, எவரேனுமாள், அதிகாரமுள்ள வேறெவரேனுமாளை அச்சுறுத்தினரோவெனவும், வசைகூறினரோவெனவும் அல்லது பயமுறுத்தினரோவெனவும் ;

(5) மேற்சொல்லப்பட்ட தொந்தரைப்படுத்துதலானது, எவரேனுமாளினால் அல்லது ஆட்கள் தொகுதியினால், அல்லது சொல்லப்பட்ட வளாகத்திலுள்ள மாணவர்களின் உள்ளேயுள்ள அல்லது வெளியேயுள்ள தாபனத்தினால் உந்தப்பட்டதோவெனவும் , தூண்டப்பட்டதோவெனவும் அல்லது ஊக்குவிக்கப்பட்டதோவெனவும், அவ்வாறாயின், அதற்குப் பொறுப்பாகவிருந்த ஆள் அல்லது ஆட்களும் அவர்கள் எவ்வளவுக்கு அவ்வாறு பொறுப்பாயிருந்தனரெனவும்,

விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காகவும்—

(அ) மேற்சொல்லப்பட்ட தொந்தரைபடுத்துதலுக்குப் பொறுப்பான, அல்லது எவ்வாளின் நடவடிக்கை அல்லது நடவடிக்கையெடுக்கத் தவறியமை, மேற்சொல்லப்பட்ட தொந்தரைபடுத்துதலை இயலச்செய்ததோ, அவ்வாளுக்கெதிராக அல்லது அவ்வாட்களுக்கெதிராக எடுக்கப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது வேறேதேனும் நடவடிக்கை ;

அத்துடன்

(ஆ) இதேதன்மையினவான சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதனைத் தடுப்பதற்குக் கையாளப்படவேண்டிய பரிகரிப்பு வழிவகைகள், தொடர்பில் விதப்புரைகள் செய்வதற்காகவும் எனது ஆணையாளராகவிருப்பதற்கென இதன்மூலம் நியமிக்கின்றேன் :

அத்துடன், மேற்சொல்லப்பட்ட கருமங்கள் தொடர்பில் சொல்லப்பட்ட ஆணையாளர் ஆகிய உங்களுக்கு அவசியமானவையெனத் தோன்றக்கூடிய அத்தகைய எல்லா விசாரணைகளையும் செய்யுமாறும் அத்தகைய எல்லா நுண்ணாய்வுகளையும் நடாத்துமாறும் இத்தால் அதிகாரமளித்துத் தத்துவமளிக்கின்றேன் என்பதுடன், உங்கள் விசாரணைகளினது முடிவுகளையும் உங்கள் விதப்புரைகளையும் எடுத்துக்காட்டுகின்றதான உங்கள் கைப்பட்ட அறிக்கையொன்றை இத்தேதியிலிருந்து இரண்டு மாத காலத்தினுள் எனக்கு அனுப்பிவைக்குமாறும் பணிக்கின்றேன் :

அத்துடன், மேலே சொல்லப்பட்ட கருமங்கள் தொடர்பிலான ஏதேனும் விசாரணையில் உங்கள் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய பகுதி பகிரங்கமாக நடாத்தப்படுதலாகாதென இத்தால் பணிக்கின்றேன் :

அத்துடன், உங்கள் விசாரணைகளினதும் நுண்ணாய்வுகளினதும் நோக்கங்களுக்காக, உங்களால் உதவி அல்லது தகவல் கோரப்படும் எல்லாப் பகிரங்க அலுவலர்களையும் வேறு ஆட்களையும், அதன்சார்பில் முறைப்படி புரியப்படக்கூடிய அத்தகைய உதவிகளைப் புரியுமாறும் தகவல்களை அளிக்குமாறும் இத்தால் கட்டளையிட்டுப் பணிக்கின்றேன்.

கொழும்பில், இலங்கைக் குடியரசினது இலச்சினையின்கீழ் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு ஏப்பிறில் மாதம் இரண்டாம் நாளாகிய இன்று அளிக்கப்பட்டது.

அதி உத்தமனின் ஆணைப்படி,

எச். ஜீ. டி. விஜேசிங்க,
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.